தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மலை சாகுபடி மரவள்ளிக்கிழங்கு விலை குறையும்

உலகில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் இந்தியா 10 வது இடத்தில் உள்ளது. கடந்த 2013-14ல், இந்தியாவின் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி 8.14 மில்லியன் டன்களில், தமிழ்நாட்டின் உற்பத்தி 61.17 சதவீத பங்களிப்புடன் 4.98 மில்லியன் டன்கள் ஆகும். தமிழ்நாட்டின், மொத்த மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் நாமக்கல், தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்கள் சரிபாதி பங்களிக்கின்றன.

தமிழ்நாட்டில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி மானவாரியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுவாக நவம்பர் - டிசம்பர் மற்றும் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டு, பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் அறுவடை செய்யப்படுகிறது. ஜுன் முதல் ஆகஸ்டு மாதம் வரை மலை சாகுபடி மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யப்படுகிறது. மேலும், மலை சாகுபடி மரவள்ளிக்கிழங்கின் விலை சமதள சாகுபடி மரவள்ளிக்கிழங்கை விட அதிக விலைக்கு விற்பனையாகிறது. இதற்கு சவ்வரிசி மற்றும் மாவு பொருட்களின் நிறம் மற்றும் தரத்திற்கு மலை சாகுபடி மரவள்ளிக்கிழங்கு மிக உகந்தாக உள்ளது. ஆகஸ்டு மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை சமதள சாகுபடி மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யப்படுகிறது.

கடந்த அக்டோபர் - நவம்பர், 2014 காலங்களில், வடகிழக்கு பருவமழை போதிய அளவு இருந்ததால் சேலம் மாவட்டத்தின் கருமந்துரை மற்றும் நாமக்கல் மாவட்டத்தின் கொல்லிமலை பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் மரவள்ளி சாகுபடியை மேற்கொண்டுள்ளனர். இவற்றுள், கொல்லிமலை அதிக சாகுபடி பரப்பை கொண்டுள்ளது. தோட்டக்கலை துறை புள்ளியியல் விவரங்களின் படி, கொல்லிமலை மற்றும் கருமந்துரை மலை பகுதிகளில் முறையே 4300 எக்டர் மற்றும் 420 எக்டர் சாகுபடிசெய்யப்பட்டுள்ளது.

மேலும் ஏப்ரல், 2015ல் 90 கிலோ மூட்டைக்கு, சவ்வரிசி மற்றும் மரவள்ளிக்கிழங்கு மாவு முறையே ரூபாய் 4000 மற்றும் 2500க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது விலை மேலும் குறைந்து சவ்வரிசி மற்றும் மரவள்ளிக்கிழங்கு மாவு முறையே ரூபாய் 3850 மற்றும் ரூபாய் 2350ஆக விற்பனை செய்யப்படுகின்றது. இதற்கு, வடமாநில வியாபாரிகளின் குறைவான கொள்முதல் மற்றும் அதிகப்படியான உணவு மற்றும் வணிக தரமாவு வியட்நாம் மற்றும் தாய்லாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது காரணமாக கூறப்படுகிறது. இந்தியாவின் முக்கிய மரவள்ளிக்கிழங்கு மாவு இறக்குமதி துறைமுகங்களாக நவசேவா, சென்னை மற்றும் தூத்துக்குடி விளங்குகின்றன.

பொதுவாக மரவள்ளிக்கிழங்கின் விலை அதன் மாவு சதவீதத்திற்கு ஏற்ப கணக்கிடப்படுகிறது. தற்போது மரவள்ளிக்கிழங்கின் விலை டன்னிற்கு ரூபாய் 7200 முதல் 7800 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த சூழ்நிலையில், வரும் ஜுன் - ஆகஸ்டு, 2015மாதங்களில் அறுவடைக்கு வரும் மரவள்ளிக்கிழங்கிற்கான விலை நிலவரம் பற்றி அறிய ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 15 வருடங்களாக சேலம் சந்தைகளில் நிலவிய விலைபற்றி ஆய்வு மேற்கொண்டது.

அதன்படி, வருகின்ற ஜுன் - ஆகஸ்டு, 2015 காலங்களில் அறுவடையாகும் மரவள்ளிக்கிழங்கிற்கு, டன் ஒன்றுக்கு ரூ.4800 முதல் ரூ.5200 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. வர்த்தக மூலங்களின்படி, வரும் மாதங்களில் வியட்நாம் மற்றும் தாய்லாந்து நாட்டிலிருந்து இறக்குமதி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதனால் விலை உயர்விற்கான வாய்ப்பு குறைவாக உள்ளதால் விவசாயிகள் தங்கள் விற்பனை முடிவுகளை உடனடியாக எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி– 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி– 0422 -6611374 0422 -6611283

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்